# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

**விளம்பர எண்: 625**
**அறிவிக்கை எண்: 21/2022** **நாள்: 23.08.2022**

**தொகுதி-V-A (தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி)-இல் அடங்கிய உதவிப் பிரிவு அலுவலர் / உதவியாளர் பதவிக்களுக்கான** காலிப்பணியிடங்களைப் பணி மாறுதல் மூலம் நியமனம் செய்வதற்கான எழுத்துத் தேர்விற்கு **21.09.2022** அன்று வரை இணைய வழி மூலம் மட்டுமே தமிழ்நாடு அமைச்சுப் பணி / தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணியில் பணிபுரியும் தகுதி வாய்ந்த உதவியாளர் / இளநிலை உதவியாளர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

## எச்சரிக்கை

- தேர்வாணையத்தின் தெரிவுகள் அனைத்தும் விண்ணப்பதாரரின் தர வரிசைப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.
- பொய்யான வாக்குறுதிகளைச் சொல்லி, தவறான வழியில் வேலை வாங்கித் தருவதாகக் கூறும் இடைத்தரகர்களிடம் விண்ணப்பதாரர்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு எச்சரிக்கப்படுகின்றனர்.
- இது போன்ற தவறான மற்றும் நேர்மையற்றவர்களால் விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இழப்புக்கும் தேர்வாணையம் எந்தவிதத்திலும் பொறுப்பாகாது.
- இணையவழி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் அனைத்துத் தகவல்களுக்கும் விண்ணப்பதாரரே முழுப் பொறுப்பாவார். விண்ணப்பதாரர், தேர்விற்கு இணையவழியில் விண்ணப்பிக்கும்பொழுது, ஏதேனும் தவறு ஏற்படின், தாங்கள் விண்ணப்பித்த இணையச்சேவை மையங்களையோ, பொதுச் சேவை மையங்களையோ குற்றம் சாட்டக் கூடாது. விண்ணப்பதாரர் பூர்த்தி செய்யப்பட்ட இணையவழி விண்ணப்பத்தினை இறுதியாக சமர்ப்பிக்கும் முன்னர், உரிய சான்றிதழ்களுடன் **[பிற்சேர்க்கை-II-இல் காண்க]** நன்கு சரிபார்த்த பின்னரே சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
- விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் போது அவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதாராமாக உரிய சான்றிதழ்களை / ஆவணங்களை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் தேவையான சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் இந்த நியமனத்திற்கு இணையவழி மூலம் விண்ணப்பிக்கும் முன் இந்த அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து தகவல் / வழிமுறைகள் / வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" ஆகியவற்றை நன்கு படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். இணையவழி விண்ணப்பத்தினை சமர்ப்பிப்பதுத் தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் தேர்வாணையத்தின் தொலைப்பேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக போதிய கால அவகாசத்திற்கு முன்னர் தெளிவுபடுத்திக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## 1. ஒரு முறைப் பதிவு:

விண்ணப்பதாரர்கள் பதிவுக்கட்டணமாக **ரூ.150/-ஐ** (ரூபாய் நூற்று ஐம்பது மட்டும்) செலுத்தி தங்களது அடிப்படை விவரங்களை இணையவழி நிரந்தரப்பதிவு மூலமாக (OTR) கட்டாயமாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்த நிரந்தர பதிவு முறையில் பதிவு செய்த விண்ணப்பங்கள் பதிவு செய்த நாளிலிருந்து 5 வருட காலங்களுக்கு செல்லத்தக்கதாகும். அதன் பிறகு உரிய பதிவுக் கட்டணத்தைச் செலுத்தி புதுப்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு முறைப் பதிவானது எந்த ஒரு பதவிக்கான விண்ணப்பமாக கருதப்படமாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வு எழுத விரும்பும் ஒவ்வொரு தேர்விற்கும் தனித்தனியே இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். ஒரு முறைப் பதிவுக்கான பதிவுக் கட்டணம் இந்த நியமனத்திற்கான விண்ணப்பம் / தேர்வுக் கட்டணம் அல்ல. விண்ணப்பதாரர்கள் இத்தேர்வுக்கான நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக் கட்டணத்தைத் தனியே செலுத்த வேண்டும். விண்ணப்பதாரர் தங்களுடைய ஒரு முறைப் பதிவுடன் ஆதார் எண்ணை இணைப்பது கட்டாயமாகும்.

[மேலும் விவரங்களுக்கு “விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்” பத்தி-2(B) & 2(C)-ஐ காண்க]

## 2. காலிப்பணியிடங்கள் பற்றிய விவரங்கள்:

| வ. எண் | பதவியின் பெயர் மற்றும் பதவிக்குறியீட்டு எண் | பணியின் பெயர் மற்றும் பணிக்குறியீட்டு எண் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | சம்பள ஏற்ற முறை |
|---|---|---|---|---|
| **1.** | **உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) (பதவிக்குறியீடு: 3235)** | **தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணி (குறியீடு எண் 007)** | **74** | **ரூ.36400-134200/- (நிலை-16)** |
| **2.** | **உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) (பதவிக்குறியீடு: 3236)** | | **29** | |
| **3.** | **உதவியாளர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) (பதவிக்குறியீடு: 1651)** | | **49** | **ரூ.20000-73700 (நிலை-9)** |
| **4.** | **உதவியாளர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) (பதவிக்குறியீடு: 3237)** | | **9** | |

<u>குறிப்பு</u>:

அறிவிக்கபட்ட காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை தோரயமானதாகும். இவை மாற்றத்துக்கு உட்பட்டதாகும். [விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 11-A-ஐ காண்க].

## 3. காலிப்பணியிடங்களுக்கான பகிர்மானப் பட்டியல்:

**இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். இருப்பினும், இத்தெரிவுக்கான காலிப்பணியிடங்கள் பணிமாறுதல் மூலம் நிரப்பப்பட உள்ளதால் தமிழ்வழியில் கல்வி பயின்றோருக்கான முன்னுரிமை, பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு இந்நியமனத்திற்குப் பொருந்தாது.**

| வ. எண் | பதவியின் பெயர் | பொது | பி.வ(இ.அ) | பி.வ(இ) | மி.பி.வ/சீ.ம | ஆ.தி(அ) | ஆ.தி | ப.ப | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) | 22 | 20 | 2 | 15 | 3 | 11 | 1 | 74 |
| 2. | உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) | 9 | 7 | 1 | 6 | 1 | 5 | -- | 29 |
| 3. | உதவியாளர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) | 16 | 12 | 2 | 10 | 1 | 8 | -- | 49 |
| 4. | உதவியாளர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) | 3 | 2 | -- | 2 | 1 | 1 | -- | 9 |

**விரிவாக்கம்:**

பொது - பொதுப்பிரிவு; பி.வ (இ.அ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்); பி.வ (இ) - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்); மி.பி.வ./சீ.ம. – மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், ஆ.தி.(அ) – ஆதிதிராவிடர் (அருந்ததியர்), ப.ப.-பட்டியல் பழங்குடியினர்

## 4. முக்கியமான நாட்கள் மற்றும் நேரம்:

<table>
<tr><td>அறிவிக்கை நாள்</td><td colspan="2">23.08.2022</td></tr>
<tr><td>இணைய வழி மூலம் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்குரிய இறுதி நாள்</td><td colspan="2">21.09.2022</td></tr>
<tr><td>இணையவழி விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான காலம்</td><td>26.09.2022<br>நள்ளிரவு 12.01 முதல்</td><td>28.09.2022<br>இரவு 11.59 வரை</td></tr>
<tr><td>நியமன அலுவலரிடம் இருந்து பெறப்படும் சான்றிதழ் மற்றும் தடையின்மைச் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய இறுதி நாள்</td><td colspan="2">06.12.2022</td></tr>
<tr><td colspan="3">எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம்</td></tr>
<tr><td>தாள்-I<br>பொதுத் தமிழ்</td><td rowspan="2">18.12.2022</td><td>காலை<br>9.30 மு. ப. முதல்<br>12.30 பி. ப. வரை</td></tr>
<tr><td>தாள்-II<br>பொது ஆங்கிலம்</td><td>மாலை<br>2.00 பி. ப முதல்<br>5.00 பி. ப. வரை</td></tr>
</table>

**குறிப்பு:**

(i) விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி வரை தங்களது இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கவும் திருத்தம் செய்யவும் அனுமதிக்கப்படுவார்கள்.

(ii) விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தில் கவனக் குறைவு காரணமாக தவறுகள் / பிழைகள் மற்றும் தவறான தகவல்கள் அளித்திருந்தால் விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான கால இடைவெளியில், சரியான தகவலைக் கொடுத்து விண்ணப்பத்தினைத் திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். விண்ணப்பம் திருத்தம் செய்வதற்கான காலம் முடிந்த பிறகு எந்த ஒரு தகவலையும் திருத்தம் செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், இது தொடர்பான எந்த ஒரு கோரிக்கைகளும் கவனிக்கப்படமாட்டாது.

(iii) இத்தேர்வின் தெரிவு முறை குறித்த தோராய காலநிர்ணயம் தொடர்பாக **பிற்சேர்க்கை– IV**-ஐ காண்க.

(iv) விண்ணப்பதாரர் இந்த நியமனத்திற்கு ஒரே ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்பிப்பிக்க வேண்டும்.

## 5. தகுதிகள்:

(அ) வயது வரம்பு **[01.07.2022** அன்றுள்ளபடி**]**

**உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) மற்றும் உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) பதவிகளுக்கு**

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | அதிகபட்ச வயது |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்) மற்றும் பட்டியல் பழங்குடியினர் | **40 வயது நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது** |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | **35 வயது நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது** |
| 3. | "ஏனையோர்" ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) தவிர] | |

**உதவியாளர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) மற்றும் உதவியாளர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) பதவிகளுக்கு**

| வ. எண். | விண்ணப்பதாரர்களின் இன வகைகள் | அதிகபட்ச வயது |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்) மற்றும் பட்டியல் பழங்குடியினர் | **35 வயது நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது** |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) | **30 வயது நிறைவடைந்தவராக இருத்தல் கூடாது** |
| 3. | "ஏனையோர்" [ஆதி திராவிடர், ஆதி திராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர் அல்லாதவர்) மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இஸ்லாமியர்) தவிர] | |

குறிப்பு:-

**i. அரசாணை (நிலை) எண்.91, மனிதவள மேலாண்மை (எஸ்) துறை, நாள் 13.09.2021-இல் ஆணையிடப்பட்டுள்ள வயது வரம்பு தளர்வு நேரடி நியமனத்திற்கு மட்டுமே பொருந்தும், இந்த நியமனத்திற்குப் பொருந்தாது.**

ii. விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 3D மற்றும் 5, இந்த நியமனத்திற்குப் பொருந்தாது.

ஆ) **கல்வித் தகுதி [23.08.2022 அன்றுள்ளபடி] மற்றும் தகுதியான பணிக்காலம் [01.08.2022 அன்றுள்ளபடி]**

விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித்தகுதியினை அல்லது அதற்கு இணையான கல்வித்தகுதியினைப் பெற்றிருக்கவேண்டும்.

| Sl. No. | Name of the Post | Educational and Service Qualification |
|---|---|---|
| 1. | Assistant Section Officer in Secretariat (Other than Law and Finance Departments) | (i) A Bachelor's degree.<br>(ii) Drafting experience for a period of not less than five years in the post of Junior Assistant or Assistant or in both the posts taken together. |
| 2. | Assistant Section Officer in Secretariat (Finance Department) | (i) A Bachelor's degree in Commerce or Economics or Statistics of any University or Institution recognised by the University Grants Commission;<br>(ii) Service for a period of not less than five years in the category of Assistant, inclusive of the services rendered in the post of Junior Assistant, in the Tamil Nadu Ministerial Service or in the Tamil Nadu Judicial Ministerial Service. |
| 3. | Assistant in Secretariat (Other than Law and Finance Departments) | (i) A Bachelor's Degree of any University or Institution recognised by the University Grants Commission.<br>(ii) Service for a period of not less than three years after acquiring Bachelor's Degree, in the category of Junior Assistant or in the category of Assistant or in both the categories put together, in the Tamil Nadu Ministerial Service or in the Tamil Nadu Judicial Ministerial Service. |
| 4. | Assistant in Secretariat (Finance Department) | (i) A Bachelor's degree in Commerce or Economics or Statistics.<br>(ii) Service for a period of not less than three years either in the category of Junior Assistant or in the category of Assistant or in both the categories put together, in the Tamil Nadu Ministerial Service or the Tamil Nadu Judicial Ministerial Service. |

குறிப்பு:

(i) The educational qualifications prescribed for these posts should have been obtained by passing the required qualification in the following order of studies viz., **10$^{th}$ + HSC or its equivalent + U.G. Degree** as required under Section 25 of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016. The results of examination should have been declared on or before the date of Notification. [Section 20 (4) (iv) of the Tamil Nadu Government Servants (Conditions of Service) Act 2016]

(ii) Applicants claiming equivalence of qualification to the prescribed qualification should upload and submit evidence for equivalence of qualification in the form of Government Order issued on or before the date of this notification and submit it along with the online application, failing which, their application **will be summarily rejected after due process**. The government orders regarding equivalence of qualification issued after the date of this notification will not be accepted. [Refer Para 9 of the "Instructions to Applicants" and "Disclaimer"]

(iii) Every person appointed to the category **of Assistant Section Officer in Secretariat (Other than Law and Finance Department) and Assistant Section Officer in Secretariat (Finance Department), by recruitment by transfer** shall undergo the Foundational Training for a period of two months and pass the examination conducted at the end of such training within the period of his probation. Failure to pass the test within such period shall result in being reverted to their parent department.

(iv) Every person appointed to the category of **Assistant Section Officers in the Finance Department** shall pass the Account Test for Subordinate Officers, Part-I within the period of his probation:
Provided that if the person so appointed is not required to undergo a period of probation, he shall pass the Account Test for Subordinate Officers, Part-I within two years from the date of his appointment.

(v) Every person appointed to the category of **Assistant in Secretariat (Other than Law and Finance Department) and Assistant in Secretariat (Finance Department), by recruitment by transfer** shall pass the examination conducted by the Human Resources and Management Department at the end of the Foundational Training Course within the period of his probation. Failure to pass the test within such period shall result in being reverted to the post from which he was appointed. The service rights of the selected candidates in the post from which he was appointed shall be protected upto one year from the date of appointment in the Tamil Nadu Secretariat Service.

**(இ) நியமன அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழ், தடையின்மைச் சான்றிதழ் மற்றும் இதர சான்றிதழ்கள் இணையவழி விண்ணப்பத்துடன் பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

விண்ணப்பதாரர்கள் நியமன அலுவலரியிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழின் நகலையும் (**இணைப்பு-II**-ஐ பார்க்கவும்) வயது, கல்வித் தகுதி, பிரிவு போன்ற உரிமை கோரல்களுக்கு ஆதரவான ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களுடன் கூடுதலாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் 01.08.2022 அன்று தமிழ்நாடு அமைச்சுப் பணி அல்லது தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் அல்லது உதவியாளர் பதவியில் (பதவி குறிப்பிடப்பட வேண்டும்) தனியே அல்லது இரண்டு பதவிகளிலும் சேர்த்து 5 ஆண்டுகள் / 3 ஆண்டுகள் பணிக்காலம் முடித்து தகுதிகாண் பருவமும் முடித்தவராக இருத்தல் வேண்டும். இந்த நியமனத்திற்கு விண்ணப்பத்தை பரிசீலிக்க நியமன அலுவலருக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்ற பரிந்துரையுடன் தடையின்மைச் சான்றிதழையும் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**நியமன அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் தடையின்மைச் சான்றிதழை 06.12.2022 அன்றோ அதற்கு முன்னரோ பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

***The candidates should upload, at the time of submitting online application, the attested copies of;***

***a) First page of the Service Register of the candidate in which his/ her details are entered along with seal and signature of the concerned authority of the Government Department, who made such entry on his/ her first appointment in Government service.***

***b) The relevant page of service register of the candidate in which entries have been made certifying that the candidate is appointed as Junior Assistant / Assistant in the respective Government Department in the Tamil Nadu Ministerial Service or Tamil Nadu Judicial Ministerial Service, as the case may be.***

**(ஈ) உடற்தகுதி சான்றிதழ்:**

பணி நியமனதிற்காக தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் கீழே குறிப்பிட்டுள்ள தரத்தில் உடற்தகுதிச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும். மாதிரி படிவம் அறிவிக்கையின் **பிற்சேர்க்கை-III**-இல் இணைக்கப்பட்டுள்ளது. இச் சான்றினை தெரிவு செய்யப்பட்ட தேர்வர், தனது நியமன அலுவலரிடம் பணியில் சேரும் போது சமர்பிக்க வேண்டும்.

| நிர்ணயிக்கப்பட்டுள்ள பார்வையின் தரம் | உடற்தகுதி சான்றிதழ் படிவம் |
|---|---|
| **பார்வை தரம் – III அல்லது அதற்கு மேம்பட்ட தரம்** | **தலைமைச் செயலகப் பதவிகளுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள படிவம்.** |

தெரிவிற்கு வரும் கண்பார்வை குறைபாடுடைய விண்ணப்பதாரர்கள் தகுதி வாய்ந்த அரசு கண் மருத்துவ நிபுணரிடம் (Specialist) கண்பார்வைத் தகுதிச் சான்றிதழைப் பெற்று நியமன அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**(உ) தமிழ் மொழியறிவு:**

விண்ணப்பதாரர்கள் போதுமான தமிழ் மொழியறிவு பெற்றிருக்க வேண்டும். **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளில் பத்தி** 14(I)(iii) இந்நியமனத்திற்குப் பொருந்தாது.

**6. கட்டணம்:**

| | | |
|---|---|---|
| **அ)** | <u>பதிவுக் கட்டணம்</u><br>**நிரந்திரப் பதிவுக்கட்டணம் [(அ.ஆ(நி) எண்**.32, **பணியாளர்** (ம) **நிர்வாக சீர்திருத்தத்துறை, நாள்** 01.03.2017-**இன் படி]**<br><u>**குறிப்பு** :</u><br>நிரந்தர பதிவில் பதிவு செய்த நாளிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவுறாத விண்ணப்பதாரர்கள், இத்தேர்வுக்கான பதிவுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றனர் | **ரூ.150/-** |
| **ஆ)** | <u>தேர்வுக் கட்டணம்</u><br>கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியுடையவர்களைத் தவிர பிற விண்ணப்பதாரர்கள், இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது தேர்வுக்கட்டணம் செலுத்த வேண்டும். | **ரூ.100/-** |

<u>**தேர்வுக் கட்டணச் சலுகை:**</u>

| வகை | சலுகை |
|---|---|
| **1. ஆதிதிராவிடர்/ ஆதிதிராவிடர்(அருந்ததியர்)** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **2. பட்டியல் பழங்குடியினர்** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |
| **3. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சீர்மரபினர்** | **மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை** |
| **4. இசுலாமியர் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட இசுலாமிய வகுப்பினர்** | **மூன்று முறை மட்டும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை** |

| | |
|---|---|
| **5. நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் (இயலாமையின் அளவு 40% மற்றும் அதற்கு மேலும்)** | **கட்டணம் செலுத்தத் தேவையில்லை.** |

குறிப்பு:

1. முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட கட்டணச் சலுகைகளின் அடிப்படையில், மொத்த தேர்வுக்கட்டண இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கை கணக்கிடப்படும்.
2. விண்ணப்பதாரர் பெறும் இலவச கட்டணச் சலுகை வாய்ப்புகளின் எண்ணிக்கையானது தெரிவின் எந்நிலையிலும் தேர்வாணையத்தால் சரிபார்க்கப்படும்.
3. விண்ணப்பதாரர் தம்முடைய முந்தைய விண்ணப்பங்களில் கோரப்பட்ட கட்டணச் சலுகை தொடர்பான தகவல்களை மறைத்து விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து கட்டணவிலக்கு தவறாகக் கோரும் பட்சத்தில், அவருடைய விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படுவதுடன், தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் / தெரிவுகளில் கலந்து கொள்வதிலிருந்து ஒருவருடகாலத்திற்கு விலக்கி வைக்கப்படுவார்.
4. விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டண விலக்கு தொடர்பான இலவச சலுகையைப் பெறுவதற்கு இணையவழி விண்ணப்பத்தில் “ஆம்” அல்லது “இல்லை” என்ற விருப்பங்களை கவனமாகத் தேர்வு செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
5. விண்ணப்பதாரர், தங்களது தன் விவரப்பக்கத்தின் **Application History**-ல் தோன்றும் தகவல்களைப் பொருட்படுத்தாமல் தேர்வுக்கட்டணச் சலுகை இதுவரை எத்தனை முறைபயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை தாங்கள் சுயமாகக் கணக்கிட்டு வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்.
6. கட்டணச்சலுகை கோரி விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பமானது விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மொத்த இலவச வாய்ப்புகளின் எண்ணிக்கையிலிருந்து ஒருவாய்ப்பு குறைக்கப்பட்டதாகக் கருதப்படும்.
7. அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச இலவசவாய்ப்புகளை ஏற்கனவே பயன்படுத்திக் கொண்ட விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகையை பெற விரும்பாத விண்ணப்பதாரர் / தேர்வுக்கட்டணச் சலுகை பெற தகுதியற்ற விண்ணப்பதாரர் தேர்வுக்கட்டணச் சலுகை தொடர்பான கேள்விக்கு “இல்லை” என்ற விருப்பத்தினை தெரிவு செய்து நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணம் செலுத்தும் முறை மூலம் உரிய கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.
8. விண்ணப்பதாரர் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுக்கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கவில்லையென்றால், விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

[மேலும் தேர்வுக் கட்டணச் சலுகை தொடர்பான விவரங்களுக்கு **விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளில்” உள்ள பத்தி 6-ஐ காண்க]**

## 7. தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை:

i. தேர்வுக் கட்டணம் ரூ.100/-ஐ (ரூபாய் நூறு மட்டும்) இணையவழியில் (இணைய வங்கி, பற்று அட்டை, கடன் அட்டை) விண்ணப்பிக்க நிர்ணயிக்கப்பட்ட இறுதி நாளிற்குள் செலுத்த வேண்டும்.

ii. விண்ணப்பதாரர்கள் உரிய சேவைக் கட்டணமும் சேர்த்து செலுத்த வேண்டும்.

iii. விண்ணப்பதாரர்களின் கட்டணச் சலுகைக்கான தகுதியின் அடிப்படையில்தான் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு பெற முடியும்.

iv. இணையவழியில் தேர்வுக் கட்டணம் செலுத்தாமல், நேரடியாக செலுத்தும் வரைவு காசோலை/ அஞ்சல் ஆணை போன்றவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவர்கள் செலுத்திய கட்டணமும் திருப்பி அளிக்கப்படமாட்டாது.

v. இணைய வழியில் தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் தோல்வி அல்லது கட்டணத்தை வங்கிகள் ஒத்திசைவு செய்வதற்கு தாமதம் ஆகியவற்றிற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது. விண்ணப்பதாரர் செய்த பணப் பரிமாற்றம் வெற்றிகரமாக முழுமையடைந்து இருப்பதை உறுதி செய்வது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும்.

[**தேர்வு கட்டணம் தொடர்பாக "விண்ணப்பதாரர்களுக்கான** அறிவு**ரைகளில்" பத்தி** – 2(V)-**ஐ காண்க**]

**8. சலுகைகள்:**

i. ஆதிதிராவிடர், ஆதிதிராவிடர் (அருந்ததியர்), பட்டியல் பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர் அல்லாதவர்), பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (இசுலாமியர்), நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கான கட்டணச் சலுகைகள் குறித்த விவரங்கள் "**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளில்" பத்தி 6-ஐ காண்க**. ஆதரவற்ற விதவைகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான கட்டணச் சலுகை இந்த நியமனத்திற்கு பொருந்தாது.

ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சலுகையைக் கோரும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய சான்றிதழ் ஆதாரங்களை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

குறிப்பு :

**முன்னாள் இராணுவத்தினர், ஏதேனும் ஒரு பிரிவு / பணியில் அடங்கிய பதவிக்கு ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டால், பின்னர், வேறு எந்த நியமன நிகழ்வுகளிலும் "முன்னாள் இராணுவத்தினர்" என்ற சலுகையைக் கோர முடியாது**. [**தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள்** (**பணி நிபந்தனைகள் சட்டம், 2016 பிரிவு 3(j)- இல் குறிப்பிட்டுள்ளவாறு**]

**9. தேர்வுத் திட்டம் (விரிந்துரைக்கும் வகை) :**

| பாடம் | கால அளவு | அதிகபட்ச மதிப்பெண்கள் | தெரிவிற்குத் தகுதி பெற அனைத்து பிரிவினருக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் |
|---|---|---|---|
| **தாள் –I<br>பொதுத் தமிழ்<br>(பட்டப்படிப்புத் தரம்)** | **3<br>மணி நேரம்** | **100** | **60** |
| **தாள் –II<br>பொது ஆங்கிலம்<br>(பட்டப்படிப்புத் தரம்)** | **3<br>மணி நேரம்** | **100** | |

குறிப்பு:

(i) தாள்-I மற்றும் தாள்-II-இல் பெறும் மொத்த மதிப்பெண்கள் தர நிர்ணயத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

(ii) மேற்குறிப்பிட்ட பாடங்களுக்கான பாடத்திட்டம் இவ்வறிக்கையின் பிற்சேர்க்கை-I மற்றும் தேர்வாணையத்தின் இணையதளத்திலும் உள்ளன.

(iii) தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து **விண்ணப்பதாரர்களின் அறிவுரைகளில் பத்தி** 17-ஐ **காண்க**.

## 10. தெரிவு முறை:

எழுத்துத் தேர்வில் விண்ணப்பதாரர் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மற்றும் பணி நியமனங்களுக்கான இடஒதுக்கீடு விதி ஆகியவற்றின் அடிப்படையில் (தனித்தனியே ஒவ்வொரு பதவிக்கும் பொருந்தும்) தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களின் பட்டியல் தேர்வாணைய இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏற்கனவே விண்ணப்பதாரர்கள் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களைச் சரிபார்த்த பின்னர் அசல் சான்றிதழ்களைச் சரிபார்க்கும் பொருட்டு விண்ணப்பதாரர்கள் அழைக்கப்படுவர், பின்னர் தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு கலந்தாய்வு நடைபெறும்.

## 11. தேர்வு மையங்கள்:

**எழுத்துத் தேர்வு சென்னை (0101) தேர்வு மையத்தில் மட்டுமே நடைபெறும்.**

**குறிப்பு:**

விண்ணப்பதாரர்கள் தேர்வு எழுதுவதற்கும் / சான்றிதழ் சரிபார்ப்புக்கும் / கலந்தாய்விற்கும் ஏதேனும் ஒரு வகையான விடுப்பினைத் துய்த்து தங்களது சொந்த செலவில் தேர்வு மையம் / தேர்வாணையத்திற்கு வரவேண்டும்.

## 12. குற்றவியல் வழக்குகள் / ஒழுங்கு நடவடிக்கைகள் தொடர்பான உறுதிமொழி:

i. விண்ணப்பதாரருக்கு எதிராக தொடங்கப்பட்ட / நிலுவையில்லுள்ள அல்லது முடிக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் / குற்றவியல் நடவடிக்கைகள், கைது, விடுவிப்பு, ஏதேனும் இருப்பின் அந்த தகவல்களைத் தேர்வாணையத்திற்கு இணைய வழி விண்ணப்பத்தில் விண்ணப்பிக்கும்போது தெரிவித்தல் வேண்டும்.

ii. இணையவழி விண்ணப்பத்தில் நிலுவையிலுள்ள குற்றவியல் / ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றி தெரிவித்துள்ள விண்ணப்பதாரர், அது தொடர்பான முதல் தகவல் அறிக்கையின் நகலை / குற்றக் குறிப்பாணை / காரணம் கேட்கும் குறிப்பாணையின் நகலை (நேர்வுக்கேற்ப) **கண்டிப்பாக இணையவழி விண்ணைப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** தவறினால் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

iii. விண்ணப்பதாரர், தங்கள் மீதான குற்றவியல் நடவடிக்கைகளில் குற்றத் தீர்ப்பு / ஒழுங்கு நடவடிக்கைகளில் தண்டனை விதிக்கப்பட்டது தொடர்பாக தங்களது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், கோரும் பொழுது தொடர்புடைய நீதிமன்ற ஆணை அல்லது விடுவிக்கப்பட்ட ஆணை அல்லது ஒழுங்கு நடவடிக்கை சார்ந்த குறிப்பாணையினைக் **கண்டிப்பாக இணையவழி விண்ணைப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** மேற்குறிப்பிட்ட ஆவணங்களை பதிவேற்றம் செய்ய தவறும் நிலையில் விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

iv. தடையின்மைச் சான்றிதழை சமர்ப்பித்த பிறகோ அல்லது இணைய வழி விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்த பிறகோ, நியமனம் தொடர்பான பணிகள் முழுமையாக நிறைவடைவதற்கு முன் வரை உள்ள தெரிவு பணிகளின் எந்த ஒரு நிலையின் போதும் விண்ணப்பதாரர் மீது, ஏதேனும் குற்றவியல் வழக்கு பதியப்பட்டிருந்தாலோ / ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலோ, அவர் குற்றத்தீர்ப்பு / தண்டனை ஏதும் பெற்றிருந்தாலோ, தேர்வாணையத்தால் ஆவணங்களைப் பதிவேற்றம் / சமர்ப்பிக்கக் கோரும் நிலையில், விண்ணப்பதாரர்கள் அது குறித்த உண்மை விவரங்களை, தேர்வாணையத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். மேலும், இந்த அறிவுரையினை கடைபிடிக்கத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுடைய விண்ணப்பம் தேர்வாணையத்தால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படுவதுடன் ஓராண்டுக்கு தேர்வு எழுதுவதிலிருந்தும் விலக்கி வைக்கப்படுவர். [**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் 14(S)-இல் உள்ளவாறு**]

v. விண்ணப்பதாரருக்கு எதிராக எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் விவரங்கள் நியமன அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழில் **(பிற்சேர்க்கை-II)** தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளில் ஏதேனும் விதி மீறப்பட்டால் அவர்களது விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.

## 13. பொதுவான தகவல்கள்:

(A) இட ஒதுக்கீடு விதி இத்தெரிவிற்கு பொருந்தும். இருப்பினும், இத்தெரிவுக்கான காலிப்பணியிடங்கள் பணிமாறுதல் மூலம் நிரப்பப்பட உள்ளதால் தமிழ்வழியில் கல்வி பயின்றோருக்கான முன்னுரிமை, பெண்கள், ஆதரவற்ற விதவைகள், முன்னாள் இராணுவத்தினர் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கான இட ஒதுக்கீடு இந்நியமனத்திற்குப் பொருந்தாது.

(B) இப்பதவிக்குரிய தெரிவு தொடர்பாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் ஏதேனும் வழக்குகள் நிலுவையில் இருப்பின், அவற்றின் மீதான இறுதி ஆணைகளுக்குட்பட்டு தற்காலிகமாக தெரிவு செய்யப்படும்.

(C) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள் :
**நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளுக்கான 4% இடஒதுக்கீடு இந்நியமனத்திற்கு பொருந்தாது. இருப்பினும் அரசாணை (நிலை) எண் 20, மாற்றுத் திறனாளிகள் நலத் (DAP.3.2) துறை, நாள் 20.06.2018–இல் இப்பதவிக்கு கீழ்க்கண்ட குறைபாடுகள் கொண்ட தகுதியான விண்ணப்பதாரர்கள் மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது.**

| வ. எண் | பதவியின் பெயர் | நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளின் வகை |
|---|---|---|
| 1. | உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) | LV, HH, LD (OA, OL, BL, OAL, BLOA), LC, DF, AC |
| 2. | உதவிப் பிரிவு அலுவலர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) | LV, HH, LD (OA, OL, BL, OAL, BLOA), LC, DF, AC |
| 3. | உதவியாளர், தலைமைச் செயலகம் (சட்டம் மற்றும் நிதித் துறை தவிர) | All categories of Differently Abled Persons |
| 4. | உதவியாளர், தலைமைச் செயலகம் (நிதித் துறை) | |

(D) நிர்ணயிக்கப்பட்ட குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் விதி, 2017-ல் (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்துறை (Divyangjan), சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், இந்தியஅரசு) குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் படிவத்தில் அரசாணை (நிலை) எண்.28, மாற்றுத்திறனாளிகள் (DAP.3.1) நலத்துறை, நாள் 27.07.2018-ல், வரையறுக்கப்பட்டுள்ள சான்றிதழ் வழங்கக்கூடிய தகுதிவாய்ந்த அலுவலரிடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளிச் சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும். (**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி** 14(M)-ஐ **காண்க**).

(E) ஆதிதிராவிட (அருந்ததியர்) வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிரப்பப்பட்ட பிறகும், அவ்வகுப்பினர்களில் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களாக இருப்பின் அவ்விண்ணப்பதாரர்கள், ஆதிதிராவிட வகுப்பினர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடஒதுக்கீட்டிற்கும் மதிப்பெண் தரவரிசைப்படி நிரப்பப்படுவர். அருந்ததியர்களுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் கிடைக்கப்பெறாவிடில், அப்பணியிடங்கள் பிற ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களைக் கொண்டு நிரப்பப்படும். **[தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 27-இல் குறிப்பிட்டுள்ளவாறு ]**

(F) **இணையவழி விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்ட உரிமை கோரல்களுக்கான ஆவணச் சான்றுகளை இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், விண்ணப்பத்தில் மாற்றம் செய்யக் கோரும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்பட மாட்டாது. குறிப்பிட்ட காலநேரத்திற்குள் ஆவணங்களை பதிவேற்றம் செய்யத் தவறினால் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.**

(G) கீழ்க்காணும் உண்மைகளை மறைக்கும்பட்சத்தில் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் உரிய வழிமுறையைப் பின்பற்றி நிராகரிக்கப்படும் மற்றும் விண்ணப்பதாரர்கள் தேர்வாணையத்தால் நிரந்தரமாகவோ அல்லது தக்கதென கருதப்படும் காலம் வரையில் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளிலிருந்து விலக்கிவைக்கப்படுவர். (i) முந்தைய தேர்வுகளில் கலந்துகொண்டது மற்றும் இலவச சலுகையை பயன்படுத்தியது. (ii) அரசு அல்லது மத்திய மாநில அரசின் கீழ் உள்ள நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், சட்டத்தின் வாயிலாக நிறுவப்பட்ட நிறுவனங்கள், அரசுத் துறை கழகங்கள், பல்கலைக்கழகங்கள் முதலியவற்றில் முறையாகவோ / தற்காலிகமாகவோ பணிபுரிந்து வருவது / பணிபுரிந்தது. (iii) குற்றவியல் நிகழ்வுகள், கைதானது, குற்றங்களுக்கான தண்டனை பெற்றது / விடுவிக்கப்பட்டது. (iv) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் / மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையங்களினால் தேர்வு எழுதும் உரிமை இரத்து செய்யப்பட்டது அல்லது தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டது.

(H) கைது செய்யப்பட்டிருத்தல், குற்றத்தீர்ப்பு / குற்றமற்றவர் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருத்தல், வேலைக்கு ஆட்கள் தெரிவு செய்யும் ஏதேனும் ஒரு முகமையினால் தடை / தகுதியின்மை செய்யப்பட்டிருத்தல், குற்ற நடவடிக்கை (அல்லது) ஏதேனும் ஒழுங்கு நடவடிக்கை தொடங்கப்பட்டிருத்தல் / முடிவுற்றிருத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய சரியான மற்றும் உண்மையான தகவல்களை, விண்ணப்பத்தில் தெரிவிப்பதுடன், தீர்ப்பின் அசல் / ஆணை / அரசாணை/ துறை நடவடிக்கை கைவிடப்பட்ட அரசாணை அல்லது இதர ஆவணங்களை **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் விண்ணப்பம் சமர்ப்பித்த பின்னர், நியமனம் பெறும் காலம் வரை எப்போது ஏற்பட்டிருப்பினும் உடனடியாக தேர்வாணையத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். தவறினால், தகுந்த தண்டனைக்குரிய நடவடிக்கையை தேர்வாணையம் மேற்கொள்ளும். (**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி** 12-ஐ **காண்க**)

(I) **இடஒதுக்கீடு குறித்த தவறான தகவல்கள் / தகுதிக்கான காரணிகளான வயது, பாலினம், வகுப்பு பிரிவுகள், கல்வித் தகுதி, பணிக்காலத் தகுதி, உடல்தகுதி போன்ற அடிப்படைத் தகுதிகள் குறித்த தவறான தகவல் கொண்ட விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத விண்ணப்பங்களும் உரிய வழிமுறைகளைப் பின்பற்றி நிராகரிக்கப்படும்.**

(J) நிரந்தரப்பதிவு என்பது எந்தவொரு பதவி **/** நியமனத்துக்கான விண்ணப்பமாக கருதப்பட மாட்டாது**.** விண்ணப்பதாரர்களால் நிரந்தரப்பதிவில் பொதுவான தகவல்கள் அளிக்கப்பட்டிருப்பினும் **இந்தத் தேர்வுக்குரிய விண்ணப்பத்தில் அளிக்கப்படும் விவரங்கள் / தகவல்கள் மட்டுமே இத்தேர்வுக்கு பரிசீலிக்கப்படும்.** இந்த நியமனத்திற்கான இணையவழி விண்ணப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தேவையான விவரங்கள் / தகவல்கள் தவறானதாக அல்லது முழுமை பெறாதவையாக இருந்தால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது.

(K) **திருநங்கைகளின் வகுப்பு நிர்ணயம்;**

i. எந்த ஒரு சாதிச் சான்றிதழும் இல்லாத திருநங்கை விண்ணப்பதாரர்கள் தங்களது இணையவழி விண்ணப்பத்தில் அரசாணை(நிலை) எண்.28, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்டவகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 06.04.2015-இன் படி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் பிரிவினையோ அல்லது ஏனையோர் பிரிவினையோ தேர்வு செய்து கொள்ளலாம்.

ii. சாதிச்சான்றிதழ் வைத்துள்ள ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட (அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்த திருநங்கை விண்ணப்பதாரர், அவர்களது சமூகத்தினைச் சார்ந்தவர்களாகவே கருதப்படுவர்.

iii. ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட(அருந்ததியர்) / பழங்குடியினர் வகுப்பைத் தவிர மற்ற வகுப்பினைச் சார்ந்த மற்றும் அப்பிரிவின் அடிப்படையில் சாதிச்சான்றிதழ் பெற்றுள்ள திருநங்கை விண்ணப்பதாரர், அவருடைய வகுப்பு (Class) அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஆகிய இரண்டு வகுப்புகளில், அவருக்கு சாதகமாக தோன்றுகின்ற ஒன்றை, ஒரு முறைப் பதிவின் போதே தேர்வு செய்ய வேண்டும். அதன்பிறகு, வகுப்பை எப்பொழுதும் மாற்ற இயலாது.

திருநங்கைகள் வகுப்பு நிர்ணயம் குறித்து அரசாணை நிலை எண்.90, சமூக நலம் மற்றும் சத்துணவுத் [SW8(2)] துறை, நாள் 22.12.2017 மற்றும் **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி 14F(vi)-(xi)-ஐ காண்க.**

## 14. இதர முக்கிய அறிவுரைகள்:

a) **விண்ணப்பதாரர்கள் தேர்விற்கான தங்களுடைய தகுதிகளை உறுதி செய்தல்:** தேர்விற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் தரப்பட்டுள்ள அறிவுரைகளை நன்கு படித்த பின்னர் தாங்கள் அத்தேர்விற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளனரா என உறுதி செய்து கொள்ள வேண்டும். எழுத்துத்தேர்வு / சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படுவது அல்லது தெரிவு செய்யப்பட்டோர் பட்டியலில் தற்காலிகமாக விண்ணப்பதாரரின் பெயர் சேர்க்கப்படுவதால் மட்டுமே, ஒருவிண்ணப்பதாரர் பதவி நியமனம் பெற உரிமை அளிக்கப்பட்டவராகமாட்டார். எனவே, விண்ணப்பதாரரின் விண்ணப்பம், எல்லாநிலைகளிலும் தற்காலிகமானது மற்றும் விண்ணப்பதாரரால் அளிக்கப்பட்ட விவரங்கள் தவறு என்றாலோ தேர்வாணைய அறிவுரைகள் அல்லது விதிகள் மீறப்பட்டுள்ளன என்று கண்டறியப்படும்பட்சத்தில், எந்நிலையிலும், தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட, உரிய வழிமுறையைப் பின்பற்றி விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை தேர்வாணையத்திற்கு உண்டு. **[விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" பத்தி -11(B)(C) & (D) -இல் உள்ளவாறு].**

b) தகுதியுள்ள விண்ணப்பதாரருக்கு, தேர்வு எழுதுவதற்கான அனுமதிச்சீட்டுகள், **www.tnpscexams.in / www.tnpsc.gov.in** என்ற தேர்வாணைய இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும். விண்ணப்பதாரர் அவற்றை பதிவிறக்கம் செய்து கொள்ளவேண்டும். அனுமதிச்சீட்டு தனியாக அஞ்சல் மூலம் அனுப்பப்பட மாட்டாது. விண்ணப்பதாரர் தேர்வின் பொழுது அனுமதிச்சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நிபந்தனையையும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். [**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்**" **பத்தி** -2 (V)(g)-**இல் உள்ளவாறு**].

c) தெளிவுரை வேண்டுவோர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய அலுவலகத்தினை நேரில் அல்லது **1800 419 0958** என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணின் மூலம், அனைத்து வேலை நாட்களிலும் முற்பகல் **10.00** மணி முதல் பிற்பகல் **5.45** மணி வரை தொடர்பு கொள்ளலாம். ஒருமுறை பதிவு மற்றும் இணையவழி விண்ணப்பம் குறித்த சந்தேகங்களுக்கு **helpdesk@tnpscexams.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் இதர சந்தேகங்களுக்கு **grievance.tnpsc@tn.gov.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பலாம்.
**[விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" பத்தி-2(V)–இல் குறிப்பு (h)(i)(j)-இல் உள்ளவாறு].**

d) **விண்ணப்பதாரர்களுக்கான தகவல் பரிமாற்றம்**:
எழுத்துத் தேர்வு முடிவுகள் / சான்றிதழ் சரிபார்ப்பு / வாய்மொழித் தேர்வு / கலந்தாய்விற்கான நாள் மற்றும் நேரம் குறித்த தகவல்கள் ஏதும் விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் மூலமாக அனுப்பப்படமாட்டாது. இது குறித்த தகவல்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

e) **விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாள் முதல் தெரிவு பணிகள் முழுவதுமாக முடிவு பெறும் நாள் வரை இந்த தெரிவு குறித்த தகவல்கள், விளக்கங்கள் எதுவும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்கள் உட்பட எந்த ஒரு மனுவிற்கும் தகவல் வழங்கப்படமாட்டாது.**

f) <u>கைப்பேசி மற்றும் இதர மின்னணு சாதனங்களுக்குத் தடை</u>:

1. விண்ணப்பதாரர்கள் தேர்வுக் கூடத்திற்குள் அனுமதிக்கப்பட்ட எழுது பொருட்கள் தவிர, மின்னணு சாதனங்களான தரவி (Blue Tooth) கைப்பேசி, நினைவூட்டு உள்கட்டமைப்புக் குறிப்புகள் அடங்கிய கைக்கடிகாரங்கள் மற்றும் மோதிரம் அல்லது ஏனைய மின்னணு சாதனங்கள், மின்னணு அல்லாத பதிவுக்கருவிகள், புத்தகங்கள், குறிப்புகள், கைப்பை வண்ண எழுது கோல், பென்சில் புத்தகங்கள், குறிப்புகள், தனித் தாள்கள், கணித மற்றும் வரைப்படக் கருவிகள், மடக்கை அட்டவணை, படியெடுக்கப்பட்ட வரைபடம், காட்சி வில்லைகள், பாடப்புத்தகங்கள் மற்றும் பொதுக் குறிப்புத் தாட்கள் மற்றும் பதிவுசெய்யும் தனிக்கருவிகளாகவோ மோதிரம் அல்லது கைக்கடிகாரத்தின் இணைப்பாகவோ கொண்டுவரக் கூடாது.
2. அவ்வாறான பொருட்களை வைத்திருப்போர் காணப்பட்டால் அவர்கள் தொடர்ந்து தேர்வு எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், அவர்களது

விடைத்தாள் செல்லாததாக்கப்படுவதுடன் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்கியும் வைக்கப்படுவர். தேவைப்படின், அவ்விடத்திலேயே முழுச் சோதனைக்கு உட்படுத்தப்படுவர்.

3. விண்ணப்பதாரர்கள் தங்கள் கைப்பேசி உள்ளிட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை தேர்வுக்கூடத்திற்கு கொண்டுவர வேண்டாம் என அறிவுறுத்தப்படுவதுடன், அப்பொருட்களின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தர இயலாது எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

(**மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்** 17(E) **ஐ காண்க**)

g) தேர்வுக்கு விண்ணப்பிப்பவர்கள் அத்தேர்விற்கு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பெற்றவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்களால் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களைத் தேர்வாணையம் ஐயமறத் தெரிந்து கொள்ளும்வரை அவர்களின் விண்ணப்பங்கள் எழுத்துத் தேர்விற்கு (அதாவது எல்லா நிலைகளிலும்) தற்காலிகமாக கருதப்படும். விண்ணப்பதாரர் தேர்விற்கு முன்போ அல்லது பின்னரோ நியமனத்திற்கு போட்டியிடத் தகுதியற்றவர் என்று தேர்வாணையத்தால் கண்டறியப்பட்டால், எந்நிலையிலும், அதாவது தெரிந்தெடுக்கப்பட்ட பின்னர் கூட உரிய வழிமுறையைப் பின்பற்றி விண்ணப்பத்தை நிராகரிக்கும் உரிமை உண்டு.

h) தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறு எனக் கண்டறியப்பட்டால், உரிய வழிமுறைகளைப் பின்பற்றி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பதாரர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவும் நேரிடும்.

i) **ஒழுங்கீனச் செயல்களுக்குத் தடை:**
தேர்வு எழுதும் அறையில் மற்ற விண்ணப்பதாரர்களுடைய விடைத்தாள்களிலிருந்து பார்த்து எழுதுதல் / பார்த்து எழுத அனுமதித்தல் அல்லது வேறு ஏதேனும் முறையற்ற உதவிகளைப் பெறவோ அல்லது பெற முயற்சிக்கவோ அல்லது அத்தகைய முறையற்ற உதவிகளைத் தரவோ அல்லது தர முயற்சிக்கவோ கூடாது.

j) **தேர்வுக் கூடத்தில் நடந்து கொள்ளும் முறை:**
தேர்வு எழுதும் எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வுக் கூடத்தில் தவறான நடவடிக்கையிலோ (அல்லது) தேர்வினை சீர்குலைக்கும் நோக்கத்திலோ (அல்லது) தேர்வாணையத்தால் தேர்வினை நடத்த பணியில் அமர்த்தப்பட்டுள்ள அலுவலர் / பணியாளர்களை தாக்கும் முயற்சியிலோ ஈடுபடக்கூடாது. அவ்வாறு ஈடுபடும் விண்ணப்பதாரர்களின் செயல்கள் கடுமையான தவறாக கருதப்பட்டு, அவ்விண்ணப்பதாரர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.

k) விண்ணப்பதாரர்களுக்கான விதிமுறைகளை மீறும் பட்சத்தில் **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி** 17(E)**-ன் படி** அல்லது தேர்வாணையம் பொருத்தமானதெனக் கருதும் தண்டனை விதிக்கப்படும்.

l)
i. விரிந்துரைக்கும் வகைத் தேர்விற்கான விடைகள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட மாட்டாது.
ii. இத்தெரிவிற்கான தெரிவுப் பணிகள் முற்றிலுமாக முடியும் முன்னர், தங்களது மதிப்பெண் அல்லது விடைத்தாள் / விடைப்புத்தக நகல் அளிக்குமாறு கோரும் விண்ணப்பதாரரின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது / பரிசீலிக்கப்படமாட்டாது.
iii. தேர்வு நடவடிக்கைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், தேர்வர்களின் விரிந்துரைக்கும் வகைத்தேர்வு விடைப்புத்தகம் தேர்வாணைய இணையதளத்தில் கிடைக்கப்பெறும். உரிய கட்டணம் செலுத்தி தேர்வர்கள் அவர்களது விடைத்தாள்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
iv. தேர்வு நடைமுறைகள் முழுவதும் நிறைவடைந்த பின்னர், அத்தேர்வுக்கு விண்ணப்பித்த அனைத்து விண்ணப்பதாரரின் தொடர்புடைய விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படும்.

[**மேலும் விவரங்களுக்கு "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள் பத்தி** 17(D)(ix)–(xii)-**ஐ காண்க**]

## 15. விண்ணப்பிக்கும் முறை;

1. விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in / www.tnpscexams.in ஆகிய தேர்வாணையத்தின் இணையதளங்கள் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.
2. எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்கும் முன்பு ஆதார் எண் மூலம்ஒருமுறைப்பதிவு எனப்படும் நிரந்தரப்பதிவு (OTR) மற்றும் தன்விவரப்பக்கம் (Dashboard) ஆகியன கட்டாயமாகும். விண்ணப்பதாரர்கள் நிரந்தர பதிவு மூலம் பதிவுக்கட்டணமாக ரூ.150/- ஐ செலுத்தி, பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருமுறைப்பதிவு, பதிவு செய்த நாள் முதல் ஐந்தாண்டுகள் வரை நடைமுறையிலிருக்கும், தங்களுக்குரிய ஒரு முறைப் பதிவு கணக்கு (One Time Registration ID) மற்றும் கடவுச் சொல் மூலமாக மட்டுமே விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
3. ஒருமுறைப்பதிவில் பதிவேற்றம்செய்ய, விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம், கையொப்பம் ஆகியவற்றை CD/DVD/Pen drive போன்ற ஏதேனும் ஒன்றில் பதிவு செய்து தயாராக வைத்திருக்க வேண்டும்.
4. ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கும் மேற்பட்ட ஒருமுறைப் பதிவுக் கணக்கை (One Time Registration ID) உருவாக்க அனுமதியில்லை.
5. விண்ணப்பதாரர்கள் தங்களுக்குரிய தனித்துவமான பதிவுக்கணக்கு மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி ஏற்கனவே பதிவிட்ட தங்களது விவரங்களை பார்வையிடவும், புதுப்பிக்கவும் செய்யலாம். தங்களது ஒருமுறைப் பதிவு , கடவு சொல்லினை வேறு நபரிடமோ (அ) முகவர்களிடமோ பகிர்ந்து கொள்ள கூடாது.
6. ஒருமுறைப்பதிவு என்பது எந்தவொரு பதவிக்கான **/** நியமனத்திற்கான விண்ணப்பம் அல்ல. இது விண்ணப்பதாரர்களின் விவரங்களைப் பெற்று அவர்களுக்கு தன்விவரப் பக்கம் ஒன்றினை உருவாக்க மட்டுமே பயன்படும். எந்தவொரு பதவிக்கும் விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள், அறிவிக்கையில் "Apply" என்ற உள்ளீடு வழியே நிரந்தரப்பதிவுக்குரிய பயனாளர் குறியீடு மற்றும் கடவுச்சொல் ஆகியவற்றை உள்ளீடு செய்து விண்ணப்பிக்க வேண்டும்.
7. விண்ணப்பதாரர்கள் தாங்கள் விண்ணப்பிக்க விரும்பும் பதவியின் பெயரை தெரிவு செய்ய வேண்டும்.
8. புகைப்படம், **பிற்சேர்க்கை-II-இல்** குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் கையொப்பம் இல்லாமல் பதிவேற்றம் செய்யப்படும் இணையவழி விண்ணப்பம் உரிய வழிமுறைகளைப் பின்பற்றியப் பிறகு நிராகரிக்கப்படும்.
9. **இணையவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்தல்:**
   இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான இறுதி தேதிக்குப் பிறகு, அறிவிக்கையின் பத்தி 4-ல் (முக்கியமான தேதி மற்றும் நேரம்) குறிப்பிட்டுள்ளபடி, இணைவழி விண்ணப்பத் திருத்த காலத்தில் விண்ணப்பதாரர்கள் தங்களது இணைவழி விண்ணப்பத்தை திருத்தம் செய்ய அனுமதிக்கப்படுவர். திருத்தம் செய்யும் காலத்தின் இறுதி தேதிக்குப் பிறகு, இணையவழி விண்ணப்பத்தில் எந்த மாற்றமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தாங்கள் இறுதியாக அளித்துள்ள விவரங்களின்படி விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும். மேலும் இணையவழி விண்ணப்பத்தில் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட விவரங்களைத் திருத்தியதால் பிழைகள் ஏதேனும் ஏற்பட்டு விண்ணப்பம் நிராகரிப்பட்டால் அதற்கு தேர்வாணையம் பொறுப்பாகாது, இது விண்ணப்பதாரர்களின் பொறுப்பாகும். எந்தவொரு முறையிலும் இணையவழி விண்ணப்பத்தில் உள்ள உரிமைக் கோரல்களை மாற்றியமைப்பதற்காக தேர்வாணையத்திற்கு அனுப்பப்படும் கோரிக்கைகள் / மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
10. **அச்சிடுதலில் விருப்பதேர்வு:**
    i. விண்ணப்பத்தை இணைய வழியில் அனுப்பியபின், விண்ணப்பதாரர்கள் PDF முறையில் தங்கள் விண்ணப்பத்தை அச்சிட / சேமிக்க முடியும்.
    ii. விண்ணப்பதாரர்களுக்கு விண்ணப்ப நகல் தேவைப்பட்டால், பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல்லை பயன்படுத்தி அச்சிட்டுக் கொள்ளலாம் / பதிவிறக்கமும் செய்து கொள்ளலாம்.
    iii. இணையதள விண்ணப்ப அச்சுப்படி அல்லது வேறு எந்தவிதமான ஆதார ஆவணங்களையும் தேர்வாணையத்திற்கு அனுப்ப வேண்டாம்.

**(விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" பத்தி** - 2–**இல் உள்ளவாறு**)

## 16. ஆவணங்கள் பதிவேற்றம்:

I. விண்ணப்பதாரர்கள் இணையவழி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்போது இணையவழி விண்ணப்பத்தில் தெரிவித்த அனைத்து உரிமை கோரல்களுக்கும் / விவரங்களுக்கும் ஆதாரமாக சான்றிதழ்கள் / ஆவணங்களை கட்டாயமாக பதிவேற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள். விண்ணப்பதாரர்களால் பதிவேற்றம் செய்த சான்றிதழ்களைத் தங்கள் ஒரு முறைப்பதிவின் மூலமாக சரிபார்க்கும் வசதி உள்ளது. ஏதேனும் சான்றிதழ் தவறாகப் பதிவேற்றப்பட்டாலோ அல்லது பதிவேற்றம் செய்யப்படாமல் விடுபட்டிருந்தாலோ அல்வது ஆவணங்களைப் பதிவேற்றுவதில் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட வேண்டியிருந்தாலோ விண்ணப்பதாரர்கள், இப்பதவிக்கான தேர்வின் நுழைவுச் சீட்டு வழங்கும் நாளுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு வரை / தேர்வு நடைபெறுவதற்கு பன்னிரெண்டு நாட்களுக்கு முன்பு வரை ஆவணங்களைத் திருத்த மற்றும் மீள்பதிவேற்றம் செய்ய அனுமதிக்கப்படுவார்கள். மேலும், விவரங்களுக்கு இவ்வறிவிக்கையின் பத்தி 5-C-ஐ காண்க. **(விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" பத்தி-2-W–இல் உள்ளவாறு)**

II. **விண்ணப்பதாரர்களுக்கான தகவல்:**
எழுத்துத் தேர்வு முடிவுகள், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு தொடர்பான தேதி மற்றும் நேரம் போன்ற தகவல்கள் விண்ணப்பதாரர்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படமாட்டாது. அவ்விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். இருப்பினும் விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண் / மின்னஞ்சலுக்கு சான்றிதழ் பதிவேற்றம், சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்காணல், கலந்தாய்வு ஆகியவற்றிற்கான தேதி மற்றும் நேரத்தை வழங்க தேர்வாணையம் கூடுதல் வசதியை செய்கிறது. அனைத்து புதுப்பிக்கப்பட்ட விவரங்கள் / தகவல்களுக்கு தேர்வாணைய இணையதளத்தை அவ்வப்போது பார்வையிடுமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில்நுட்ப சிக்கல்கள் உள்ளிட்ட எந்தவொரு காரணங்களாலும் விண்ணப்பதாரர்களுக்கு குறுஞ்செய்தி / மின்னஞ்சல் சென்றடைவதில் / பெறுவதில் சிக்கல் / தாமதம் ஏற்பட்டால் / சென்றடைய தவறினாலும் தேர்வாணையம் அதற்கு பொறுப்பாகாது. குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் பெறாதது தொடர்பாக விண்ணப்பதாரர்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

## 17. விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள்:

I. இணையவழி மூலம் **21.09.2022 அன்று இரவு 11.59 மணி வரை** விண்ணப்பிக்க / திருத்த இயலும். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

II. இணையவழி விண்ணப்பத்தில் **26.09.2022 அன்று நள்ளிரவு 12.01 மணி முதல் 28.09.2022 அன்று இரவு 11.59 மணி வரை** திருத்தம் செய்யலாம். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

III. இணைய வழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்த ஆவணங்கள் / சான்றிதழ்கள் மாற்ற / பதிவேற்ற / மீள்பதிவேற்றம் செய்ய, நியமன அலுவலரால் வழங்கப்படும் சான்றிதழ் மற்றும் தடையின்மைச் சான்றிதழ் பதிவேற்றம் செய்ய **06.12.2022 அன்று இரவு 11.59 மணி வரை** அனுமதிக்கப்படுவர். பின்னர் அச்சேவை நிறுத்தப்படும்.

**(மேலும் கூடுதல் தகவல்களுக்கு தேர்வாணையத்தின் "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்" தேர்வாணையத்தின் இணையதள முகவரியான www.tnpsc.gov.in-இல் காணலாம்)**

## ஏற்றுக்கொள்ள மறுத்தல் (DISCLAIMER)

இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இணையதளத்தில் உள்ளன. எனினும், விண்ணப்பதாரர்கள் இத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் போது இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் இத்தேர்விற்கான விளம்பர அறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலோ அல்லது அதற்கு முன்போ இணைக்கல்வி ஏதேனும் இருப்பின் அது குறித்த தகவலை விண்ணப்பத்தில் தெரிவித்தும்,மேலும் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்யும் போது அவ்வரசாணைகளையும் சேர்த்து **இணையவழி விண்ணப்பத்துடன் இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.** இவ்வாறு செய்யத் தவறினால் விண்ணப்பதாரரின் விண்ணப்பம் உரிய வழிமுறையைப் பின்பற்றியப் பிறகு நிராகரிக்கப்படும். இத்தேர்வின் விளம்பர அறிவிக்கை நாளிற்கு பின்பு வெளியிடப்பட்ட இணைக்கல்வி தகுதிக்கான அரசாணைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**செயலாளர்**

**Annexure-I / பிற்சேர்க்கை -I**

**தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்**

**பாடத்திட்டம்**

**விரிந்துரைக்கும் வகை**

**குறியீடு எண் 389**

**தொகுதி-V. A**

**Paper-I: பொதுத்தமிழ் (பட்டப்படிப்புத் தரம்)**

*******

பாடத்திட்ட நோக்கம்

- கட்டுரை எழுதும் திறன்
- கடிதம் - பல்வேறு அலுவலகக் கடிதம் எழுதும் திறன்
- கொடுக்கப்பட்ட பகுதியைச் சுருக்கமாகவும், குறிப்புகளைக் கொண்டு விரிவாகவும் எழுதும் திறன்
- பொருளுணர்ந்து வினாக்களுக்குத் தெளிவாகவும் சுருக்கமாகவும் விடையளிக்கும் திறன்
- கருத்துச் செறிவுடனும் தெளிவுடனும் மொழி பெயர்க்கும் திறன்
- தமிழ்மொழித் திறன், ஆட்சிமொழிக் கலைச்சொல்லாக்கத் திறன்

மேற்கண்ட திறன்கள் வெளிப்படும் நோக்கில் இப்பாடத்திட்டம் அமைகிறது.

# <u>பாடத்திட்டம்</u>

அலகு-1

<u>கட்டுரை எழுதும் திறன்</u>

கீழ்க்காணும் பொதுவான தலைப்புகளில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

1. தமிழக விடுதலை வீரர்கள் / தமிழர் பண்பாடு
2. அச்சு ஊடகம் / மின்னணு ஊடகங்கள்
3. சுற்றுச்சூழல் / உணவும் உடல் நலமும்
4. மனித உரிமைகள் / பாலினச் சமத்துவம்
5. சமூக நீதி வரலாறு

அலகு-2

கொடுக்கப்பட்ட பகுதியிலிருந்து கேட்கப்பட்ட வினாக்களுக்குத் தெளிவான, சரியான, சுருக்கமான விடை தருதல்.

அலகு-3

கொடுக்கப்பட்ட பகுதியை மூன்றில் ஒரு பங்காகச் சுருக்கி எழுதும் திறனை வெளிப்படுத்துதல்

அலகு-4

கொடுக்கப்பட்ட சுருக்கக் குறிப்புகளிலிருந்து விரிவாக்கம் செய்து எழுதும் திறனைக் கண்டறிதல்

அலகு-5

மொழிபெயர்ப்பு

ஆங்கிலப் பகுதியைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்தல். கருத்துச் செறிவும் தெளிவும் வெளிப்படும் வகையில் மொழிபெயர்ப்பு அமைதல் வேண்டும்.

அலகு-6

அலுவலகக் கடிதம்

1. அறிக்கை எழுதும் திறன் வெளிப்படல்
2. திட்ட மதிப்பீட்டறிக்கை உருவாக்கல்
3. கருத்துரு (Proposal) எழுதும் திறன் வெளிப்படல்

அலகு-7

மொழித்திறன் கண்டறிதல்

அ) வாக்கியத்தில் அமைத்து எழுதுதல்

ஆ) இணைச்சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடரமைத்தல்

இ) அகர வரிசைப்படுத்துதல்

1) உயிர் எழுத்தில் தொடங்கும் நான்கு சொற்கள்

2) உயிர்மெய் எழுத்தில் தொடங்கும் நான்கு சொற்கள்

3) உயிரும் உயிர்மெய்யும் கலந்த நான்கு சொற்கள்

இடம்பெறல் வேண்டும்.

ஈ) பிழை நீக்கி எழுதுதல்

எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, தொடர்ப்பிழை, கருத்துப்பிழை நீக்கி எழுதும் வகையில் மூன்று வினாக்கள் அமைதல் வேண்டும்.

உ) கலைச் சொல்லாக்கம்

தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை வெளியிட்ட ஆட்சித்தமிழ் அகராதியை மையமிட்டு, துறைசார் ஆட்சித் தமிழ்ச் சொற்கள் குறித்த அறிவை வெளிப்படுத்தும் வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும். அகராதியிலுள்ள ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்க் கலைச்சொற்களை எழுதும் வகையில் வினாக்கள் அமைதல் வேண்டும்.

# TAMIL NADU PUBLIC SERVICE COMMISSION
## SYLLABUS
## (Descriptive Type)
## Group-V.A

**Code: 390**

**Paper-II: General English (Degree Standard)**

*******

**I. Essay Writing in 300 words**

- Argumentative Essay
- Descriptive Essay
- Narrative Essay
- Critical Essay
- Expository Essay
- Persuasive Essay

**II. Letter Writing**

- Letter expressing demands / needs
- Enquiry letter
- Order letter
- Letter responding to Enquiries

**III. Precis Writing**

An seen passage in 200 words is to be given.
It has to be briefed in around 70 words.

**IV. Reading Comprehension**

An unseen passage in 200 words is to be given.
Questions are to framed following K 5 Model Barrett's Taxonomy

1. Understanding Question
2. Appreciation Question
3. Interpretative Question
4. Analytical Question
5. Organizing Question
6. Inferential Question
7. Critical Question
8. Explanatory Question
9. Descriptive Question
10. Creative Question

**V. Translation**

(a) From Tamil to English
Government Order/ circular

and

(b) From English to Tamil
News articles / 5 sentences of complex structure

**VI. Hints Development**

Developing the hints into a readable passage

**VII. Notification**

Drafting Announcements / Advertisements

and

Writing Explanations / Circulars

**VIII. Grammar**

1. Active to Passive.
2. Passive to Active.
3. Direct to Indirect Speech.
4. Indirect to Direct Speech.
5. Rewrite Compound Sentence as Simple sentence.
6. Rewrite Simple Sentence as Complex sentence.
7. Transform statement into a strong question.
8. Transform statement into a weak question.
9. Transform assertive sentence into a negative sentence.
10. Add a suitable question tag.
11. Use the homophones in meaningful sentence.
12. Use the right adverb.
13. Fill in the blank with right preposition.
14. Rewrite the sentence in comparative degree.
15. Rewrite the sentence in past tense.
16. Change the underlined phrase into clause.
17. Change the underlined clause into phrase.
18. Identify the pattern of the given sentence.
19. Fill in the blanks with a suitable Article.
20. Rewrite the sentence correcting the error.

**ANNEXURE – II / பிற்சேர்க்கை -II**

**List of Documents to be uploaded**

***(Not less than 200KB in PDF) (single or multiple page in 200 KB in PDF)***

| | |
|---|---|
| 1. | SSLC Mark Sheet |
| 2. | HSC Mark Sheet |
| 3. | I. U.G degree or U.G. degree in Commerce or Economics or Statistics.<br>II. P.G. Degree.<br>III. Diploma<br><br>Provisional Certificate / Degree certificate / Consolidated Mark Sheet<br>**Note:**<br>If the issue date of provisional certificate / U.G degree / P.G Degree Certificate / Diploma falls after the date of notification (i.e., 23.08.2022) candidates should upload evidence for having acquired the prescribed qualification on or before the date of Notification, failing which their applications will be rejected. |
| 4. | Equivalence G.O. (if applicable) |
| 5. | Community Certificate |
| 6. | Differently abled certificate (if applicable) |
| 7. | Transgender ID Card (if applicable) |
| 8. | Gazetted copy for name change (if applicable) |
| 9. | No Objection Certificate |
| 10. | Form of Certificate by the appointing Authority (copy enclosed) |
| 11. | Documents / Court Orders proving Acquittal / Conviction or FIR in case of pending cases for Criminal cases registered (if applicable) |
| 12. | A passport size photo |
| 13. | Other document (if any) |

**For further details refer para 2W of “Instructions to Applicants”**

நியமன அலுவலரால் அளிக்கப்படும் சான்றிதழ்

**(FORM OF CERTIFICATE BY THE APPOINTING AUTHORITY)**

*(To be uploaded along with online application for the posts included in Group-V.A Services)*

1. **விண்ணப்பதாரரின் பெயர்**
   **Name of the applicant**

2. **வகிக்கும் பதவியின் பெயர்**
   **Name of the post held**

3. **விண்ணப்பதாரர் தகுதிகாண் பருவத்தினை முடித்தவரா? ஆம் எனில் எந்த பதவியில்?**
   **Is the applicant an approved probationer ?**
   **If so, in which post?**

4. **விண்ணப்பதாரர் இளநிலை உதவியாளர் பதவியிலோ அல்லது உதவியாளர் பதவியிலோ அல்லது இரண்டிலும் சேர்ந்தோ 01.08.2022 அன்று குறைந்த பட்சம் மூன்றாண்டுகள் / ஐந்தாண்டுகள் முறையாக பணியாற்றியுள்ளாரா? ஆம் எனில் கீழ்க்காணும் விவரங்களைத் தரவும்.**
   **Has the applicant put in Regular Service for not less than Five / Three years as on 01.08.2022 either in the post of Junior Assistant or Assistant or in both the categories taken together? Yes / No**

   **A) If Yes, give the following details:**

| பதவியின் பெயர் **Name of the Post** | பணியின் பெயர் **Name of the Service** | பணிக்காலம் **Period of employment** | |
|---|---|---|---|
| | | முதல் (நாள்) **From (date)** | வரை (நாள்) **To (date)** |
| 1.<br><br>2. | **Tamil Nadu Ministerial Service/**<br><br>**Tamil Nadu Judicial Ministerial Service*** | | |

   **Strike the Service whichever is not applicable.*

   **B)Please mention the period of drafting experience (Years/months/days):**

   ______________________________________________

5. **விண்ணப்பதாரர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டுள்ளதா? (முடிவுற்றது / நிலுவையிலுள்ளது) ஆம் எனில் அதன் விவரத்தை தெரிவிக்கவும்.**
   **Is there any disciplinary action against the applicant? (Completed / Pending) If so, furnish the details.**

   **மேற்குறிப்பு எண்.** **நாள்**
   **Endorsement No.** **Date**

6. **இவரது விண்ணப்பம் இந்த நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவதில் எனக்கு மறுப்பேதுமில்லை**
   **I have no objection to the applicant's application being considered for this recruitment.**

7. **இந்த விண்ணப்பதாரருக்கு இதுநாள் வரை தண்டனை ஏதும் அளிக்கப்படவில்லை என்று சான்றளிக்கப்படுகிறது.**
   **Certified that the applicant has no punishments against him.**

**இடம்** **அலுவலக முத்திரை** **கையொப்பம்**
**Place:** **Office Seal** **Signature**
**நாள்** **பதவியின் பெயர் (நியமன அலுவலர்)**
**Date:** **Designation (Appointing Authority)**

**Note**:

1. **The application of the candidate who have been imposed with punishment will not be considered for this recruitment. In respect of applicants on whom charges are pending, their results will be withheld by the Commission till the charges are disposed and if ultimately any punishment is imposed they will not be considered for selection.**
2. **If charges are framed or punishments are awarded after forwarding the application, the fact shall be informed to the Commission immediately.**

ANNEXURE-III/ **பிற்சேர்க்கை -III**

CERTIFICATE OF PHYSICAL FITNESS BY  A SINGLE MEDICAL OFFICER / THE CIVIL MEDICAL BOARD

Signature of Candidate____________________________________________

I/We do hereby certify that I/We have examined (full name) Thiru / Thirumathi / Selvan / Selvi ___________________________________________ a Candidate _____________ for employment under the Government as ___________ in the _____________________________________ Office in the ______________________________________________________ Department and whose signature is given above and cannot discover that he / she has any disease, communicable or otherwise, constitutional affliction or bodily infirmity / except that his / her weight is in excess of / below the standard prescribed, or except

I / We do not consider this a disqualification of the employment he / she seeks.

His / Her age is according to his / her own statement _________ years and by appearance about ___ / ___ years.

I/We also certify that he / she has marks of Small Pox / Vaccination.

Chest measurement in Inches
- On full Inspiration
- On full expiration
- Difference expansion

Height in ft.
Weight in kg.
Cardio–Vascular System
Respiratory System
His / Her vision is normal
Hypermetropic/ Myopic/ Astigmatic/
[Here enter the degree of defect and the strength of correction glasses]
Hearing is normal / defective (much or slight)
Urine - Does chemical examination show
(i) Albumen (ii) Sugar State specific gravity:
Personal marks (at least two should be mentioned) For Identification
1.
2.

SIGNATURE:
RANK:
DESIGNATION: PRESIDENT:
Member (I)
(II)

STATION: STATION:
DATE: DATE:

The candidate must make the statement required below prior to his / her Medical Examination and must sign the declaration appended thereto. His attention is specially directed to the warning contained in the note below:-

1. State your name in full:

2. State your age and birth place:

3. (a) Have you ever had small pox, intermittent or any other fever, enlargement or suppuration of glands spitting of blood, asthma, inflammation of lungs, heart disease, fainting attacks, rheumatism, appendicitis?

OR

(b) any other disease or accident requiring confinement to bed and medical or surgical treatment?

4. When, where your last vaccinated

5. Have you or any of your near relations been afflicted with consumption, serefula gout, asthma, fits, epilepsy or insanity?

6. Have you suffered from any form of nervousness due to over work or any other cause?

7. Furnish the following particulars concerning your family:

| Father's age, if living and state of health | Father's age at death and cause of death | No. of brothers living, their ages, state of health | No. of brothers dead, their ages at and cause of death |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

| Mother's age, if living and state of health | Mother's age at death and cause of death | No. of Sisters living, their ages and state of health | No. of Sisters dead, their ages at and cause of death |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | |

I declare all the above answers to be to the best of my belief, true and correct.

CANDIDATE’S SIGNATURE

Note:- The candidate will be held responsible for the accuracy of the above statement by willfully suppressing any information he will incur the risk of losing the appointment and if appointed, of forfeiting all claim to superannuation allowance or gratuity.

MedI. I-68.

**பிற்சேர்க்கை –IV**

**தெரிவு முறை குறித்த உத்தேச கால அட்டவணை**

| வ. எண். | நிகழ்வு | கால வரிசை |
|---|---|---|
| 1. | இணையவழி விண்ணப்பத்தினை விண்ணப்பிக்க விண்ணப்பத்திலுள்ள விவரங்களைத் திருத்த / கட்டணம் செலுத்த இறுதி நாள் | **21.09.2022** |
| 2. | இணையவழி விண்ணப்பத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கான காலம் | **26.09.2022 நள்ளிரவு 12.01 மணி முதல் 28.09.2022 இரவு 11.59 மணி வரை** |
| 3. | சான்றிதழ்களை பதிவேற்றம் செய்ய / மாற்ற / மீள் பதிவேற்றம் செய்ய இறுதி நாள் | **06.12.2022** |
| 4. | எழுத்துத் தேர்வு முடிவு வெளியீடு | **ஏப்ரல் 2023** |
| 5. | சான்றிதழ் சரிபார்ப்பு / கலந்தாய்வு | **மே 2023** |

**செயலாளர்**